## கெபிதிகொல்லாவ பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 08 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கெபிதிகொல்லாவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

(அ) 2014 ஆண்டின் போது கிடைத்திருந்த நீர் பவுஸர்களின் பெறுமதியை கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) புர நெகும செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 243,304 தொகை பெறுமதியான கணனிகள் மற்றும் துணைக் கருவிகளின் பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதி ரூபா 627,281 மற்றும் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 978,752 தொகையென காட்டப்பட்டிருந்த போதிலும் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு மிகை ரூபா 1,453,108 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 1,323,268 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 கடை வாடகை

---------------------------

மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடை வாடகை ரூபா 82,202 தொகை எனினும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 முத்திரைக் கட்டணம்

----------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 129(2)(ஆ) இல் காட்டப்பட்டுள்ள இரண்டாவது பட்டோலையில் குறிப்பிட்டுள்ளவாறு முத்திரை கட்டண தொகையினை இனங்கண்டு பிரதேச சபை நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம்

-----------------------------------------------

2007 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 3,500,200 தொகையினை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

----------------------------------------------------------------------------------------------------

ரூபா 1,170,000 தொகை பெறுமதியான டிரக்டர் மற்றும் கைடிரக்டர் ஒன்று 04 வருடங்களை விட மிகையான காலம் பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டதுடன் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கான இயலுமை பற்றிய சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 22.5 ஏக்கர் காணிகளின் உரிமை உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்று நிருபத்தின் இலக்கம் 03 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 130 ஏக்கர் அளவைக் கொண்ட 71 மயானங்கள் தொடர்பாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் 2006 நவம்பர் 14 திகதிய இலக்கம் PL/07/01/53 கொண்ட உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்று நிருப இலக்கம் 9 இன் பிரேரணைகள் மற்றும் விதப்புரைகள் அமுல் நடத்தியிருக்கவில்லை.

(இ) நீண்ட காலத்திற்கு முன்னர் சபைக்கு கிடைத்திருந்த டிபர் வண்டி மற்றும் பவுசர் (அதிகாரம் 203) மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 2(1) இன் பிரகாரம் பதிவு செய்யாமல் ஓட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்